Source: *Tamil Murasu*, p2
Date: 1 June 2025

சவால்களைக் கண்டு துவண்டுவிடக்கூடாது: ஓங்

ரவி சிங்காரம்

மருத்துவத் துறையில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிடலாம் என்றாலும் அவற்றைக் கண்டு துவண்டுவிடக் கூடாது என டியூக்-என்யுஎஸ் மருத்துவப் பள்ளியின் புதிய பட்டதாரிகளுக்கு சுகாதார அமைச்சரும் சமுதாயக் கொள்கைகளுக்கான ஒருங் கிணைப்பு அமைச்சருமான ஓங் யி காங் அறிவுறுத்தியுள்ளார்.

டியூக்-என்யுஎஸ் பள்ளியின் 20 ஆண்டு வரலாற்றில் ஆக அதிக மான மாணவர்கள் (121 பேர்) நேற்று பட்டம் பெற்றனர்.

அவர்களில் 67 பேர் மருத்துவத் துறையில் நோயாளிப் பராமரிப்புக் கான முனைவர் பட்டம் மட்டும் பெற்றனர்; 27 பேர் ஆய்வுக்கான பிஎச்டி (PhD) மட்டும் பெற்றனர்; ஐவர் அவ்விரு பட்டங்களையும் பெற்றனர்.

விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் ஓங், "சிங்கப்பூரில் மருத்துவப் பள்ளிகளில் சேர்வது ஆகக் கடினம் என்பதை அனை வரும் நன்கு அறிவர். கல்வி, விளையாட்டுகள், கலைகள், தொண்டூழியம் அனைத்திலும் மருத்துவப் பள்ளி மாணவர்கள் சிறந்து விளங்குவது வழக்கம்.

டியூக்-என்யுஎஸ் மருத்துவப் பள்ளியின் பட்டமளிப்பு விழாவில் இந்த ஆண்டு (2025) பட்டம் பெற்ற சிலருடன் புகைப்படம் எடுத்துக்கொண்ட சுகாதார அமைச்சர் ஓங் யி காங்.
படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்

"அப்படியிருக்கையில், மருத்துவப் பள்ளி மாணவர்களுக்கு, பட்டம் பெற்றபின் தங்கள் எதிர்காலம் பற்றி நியாயமாகவே உயர்ந்த எதிர் பார்ப்புகள் இருக்கும்.

"ஆனால், கல்வியை முடித்து மருத்துவமனைக்குள் அடி யெடுத்து வைத்ததும் நீங்கள் அதிர்ச்சியடையலாம். நோயாளி களும் அவர்களைச் சேர்ந்தவர் களும் உங்களிடம் அதிகம் எதிர் பார்க்கலாம். சிலர் சிங்கப்பூர் மருத்துவ மன்றத்தில் உங்கள்மீது புகார் கூட அளிக்கலாம்," என்றார் திரு ஓங்.

எனினும், இச்சவால்களைக் கையாளவும் மருத்துவர்களை ஆதரிக்கவும் சுகாதார அமைச்சும் மருத்துவக் குழுமங்களும் கட்ட மைப்புகளை அறிமுகப்படுத்தி யுள்ளன என்று அவர் கூறினார்.

rsingaram@sph.com.sg

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.